
**ஆகஸ்ட் – 05**

# TNPSC துளிகள்

- தீன்தயாள் துறைமுக ஆணையமானது, குஜராத் மாநிலத்தில் உள்ள கண்ட்லாவில் இந்தியாவின் முதல் 1 மெகாவாட் திறன் கொண்ட இந்தியாவில் தயாரித்தல் என்ற திட்டத்தின் கீழ் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலையைத் துவக்கியது.
- மகாராஷ்டிரா மாநில அரசானது, நாக்பூர் மாவட்டத்தின் வதாம்னா கிராமத்தில் நாட்டின் முதல் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் அங்கன்வாடி மையத்தைத் திறந்து வைத்தது.
- கூகிள் நிறுவனமானது, ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் 1 ஜிகாவாட் திறன் கொண்ட தரவு மையம் மற்றும் மின் உள்கட்டமைப்பை உருவாக்க 6 பில்லியன் டாலர்களை முதலீடு செய்ய உள்ளது.
- சமீபத்தில், கம்சட்கா தீபகற்பத்தில் ஏற்பட்ட ஒரு மிகவும் சக்தி வாய்ந்த பசிபிக் நில நடுக்கத்தினை யடுத்து, ரஷ்யாவின் க்ளுச்செவ்ஸ்காய் எரிமலை வெடித்தது.
- காசாவில் மேற்கொண்ட போர் காரணமாக இஸ்ரேலுடனான அனைத்து ஆயுத வர்த்தகத்தையும் தடை செய்த முதல் ஐரோப்பிய ஒன்றிய நாடாக ஸ்லோவேனியா மாறியுள்ளது.
- நிதிச் சேவைகளை மிகவும் நவீனமயமாக்குவதிலும், பல்வேறு நிதிசார் சேவைக்கான தயாரிப்புகளுக்கான உலகளாவிய அணுகலை மேம்படுத்துவதிலும் நிதித் தொழில் நுட்பத்தின் (FinTech) பங்கை அங்கீகரிக்கும் வகையில், உலக நிதிசார் தொழில்நுட்ப தினம் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மூளைச்சாவு அடைந்தவர்களின் உறுப்பு தானம்




- மூளைச்சாவு அடைந்து உறுப்பு தானம் செய்பவர்களுக்கு தமிழ்நாடு அரசு மரியாதை வழங்கும் திட்டமானது, உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டத்தில் மிகவும்

கணிசமாக விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் இவ்வாறு தெரிவித்து உள்ளது.
- உடல் உறுப்பு மாற்றுத் திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைவதில் மாநில அரசு மேற்கொண்ட செயலூக்கமிக்க முயற்சிகளைப் பாராட்டுவதாக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அறிவிப்பு வெளியிடப் பட்டதிலிருந்து 461 என்ற அளவிலான மாநில அரசு மரியாதைகள் வழங்கப்பட்டதாக சுகாதார சேவைகள் இயக்குநரகம் தெரிவித்துள்ளது.
- இம்மாதிரியான முதல் வகையான அரசு உத்தரவு இந்தத் திட்டத்தில் ஒரு கணிசமான விளைவினை ஏற்படுத்தியுள்ளது.
- தமிழ்நாட்டில் இதுவரையில் இல்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையிலான உறுப்பு தானங்கள் 2024 ஆம் ஆண்டில் பதிவாகின.
- உயிரிழந்த 268 உறுப்பு தானம் செய்தவர்களிடமிருந்து சுமார் 1,500 உறுப்புகள் மற்றும் திசுக்கள் மீட்டெடுக்கப்பட்டன என்பதோடு இது ஓராண்டில் ஒரு மாநிலத்தில் பதிவான அதிகபட்ச எண்ணிக்கையாகும்.
- உயிரிழந்த நன்கொடையாளருக்கு மருத்துவமனை வளாகத்திற்குள் 'honour walk - மரியாதை நடைப் பயணம்', திட்டத்தின் அனைத்து கூறுகளுக்கும் நெறிமுறைகளை உருவாக்குதல், ஒவ்வொரு தானத்திற்குப் பிறகும் மையங்கள் / ஒருங்கிணைப்பாளர் நபர்களுக்கு தமிழ்நாடு மாற்று அறுவை சிகிச்சை ஆணையத்தின் (TRANSTAN) தனிப் பட்டப் பாராட்டுக் குறிப்பு மற்றும் பல நிலைகளில் அவ்வப்போதைய மதிப்பாய்வு ஆகியவற்றையும் DGHS குறிப்பிட்டது.
- 268 உறுப்பு தானம் செய்தவர்களிடமிருந்து சுமார் 863 முக்கிய உறுப்புகள், 637 சிறிய உறுப்புகள் மற்றும் திசுக்கள் மீட்கப்பட்டு வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டன.
- முதல் முறையாக, அரசு நிறுவனங்களின் பங்களிப்பு தனியார் மருத்துவமனைகளை விட அதிகமாக இருந்தது (அரசு மருத்துவமனைகளில் இருந்து 54.48% மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இருந்து 45.52%).
- சுமார் 26 அரசு மருத்துவமனைகளில் இறந்தவர்களிடம் இருந்து பெறப்பட்ட உறுப்பு தானங்கள் நிகழ்ந்தன.
- நீலகிரி மருத்துவக் கல்லூரி போன்ற தொலைதூரக் கல்லூரிகளிலிருந்தும் தானங்கள் வழங்கப்பட்டன.
- உடல் உறுப்பு தான மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படாத உறுப்பு மீட்பு மையத்தின் பங்களிப்புகளும் அதிகமாக இருந்தன.
- மொத்த தானங்களில் 16% ஆனது உடல் உறுப்பு தான மாற்று அறுவை சிகிச்சை செய்யப் படாத உறுப்பு மீட்பு மையத்தின் பங்களிப்புகளில் இருந்து 43 தானங்கள் வழங்கப் பட்டன.

# தேசியச் செய்திகள்

## குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் தேதி 2025

- குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் செப்டம்பர் 09 ஆம் தேதி நடைபெற உள்ளது.
- மேலும் அதற்கான வாக்கு எண்ணிக்கையும் அதே நாளில் நடைபெறும்.

- இந்தியத் தேர்தல் ஆணையம் இந்த அறிவிப்பினை வெளியிட்டது.
- குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலுக்கான அறிவிப்பு ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று வெளியிடப்படும் என்பதோடு மேலும் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கடைசி தேதி ஆகஸ்ட் 21 ஆகவும் அறிவிக்கப்படும்.
- வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்படும் தேதி ஆகஸ்ட் 22 ஆகவும் மற்றும் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான கடைசி தேதி ஆகஸ்ட் 25 ஆகும்.
- வாக்குப்பதிவு ஆனது அறை எண். F-101, வாசுதா, முதல் மாடி, பாராளுமன்றம், புது டெல்லி என்ற முகவரியில் நடைபெறும்.
- இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவர் பாராளுமன்றத்தின் இரு அவைகளின் உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் குழுவின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார்.
- தேர்தல் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 233 மாநிலங்களவை உறுப்பினர்கள் (தற்போது ஐந்து இடங்கள் காலியாக உள்ளன), 12 பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் 543 தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவை உறுப்பினர்கள் (1 இடம் காலியாக உள்ளது) உள்ளனர்.
- தேர்தல் குழுவில் மொத்தம் 788 உறுப்பினர்கள் உள்ளனர், அதில் 782 உறுப்பினர்கள் வாக்களிக்க முடியும்.
- அனைத்து வாக்காளர்களும் பாராளுமன்றத்தின் இரு அவைகளின் உறுப்பினர்களாக இருப்பதால், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரின் வாக்கும் ஒரே மாதிரியான மதிப்பு கொண்டதாக இருக்கும்.
- ஒற்றை மாற்று வாக்கு மூலமான விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைக்கு ஏற்ப வாக்குப் பதிவுகள் நடைபெறும்.

**Who can contest vice-presidential election**

- Must be a citizen of India and at least 35 years of age
- He/she must not hold any office of profit
- Must meet all criteria for election as a member of Rajya Sabha
- Nomination must be signed by 20 electors and seconded by another 20

**Who elects the vice-president**

- Lok Sabha and Rajya Sabha MPs, including nominated members
- Value of votes of all electors is equal, i.e. 1
- Electors rank candidates in order of preference
- 1st preference choice cannot be left blank
- Votes to win= (Number of valid votes/2) + 1*

- இந்த முறையில், வாக்காளர் வேட்பாளர்களின் பெயர்களுக்கு எதிராக தங்களது விருப்பத் தேர்வுகளைக் குறிக்க வேண்டும்.
- விருப்பத்தேர்வை சர்வதேச அளவில் உள்ள இந்திய எண்கள், ரோமன் வடிவத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு இந்திய மொழிகளின் வடிவத்திலும் குறிக்கலாம்.
- விருப்பத் தேர்வை எண்களில் மட்டுமே குறிக்க வேண்டும், சொற்களில் குறிப்பிடக் கூடாது.
- வாக்காளர் வேட்பாளர்களின் எண்ணிக்கையைப் போலவே அவர்களின் பல விருப்பத் தேர்வுகளையும் குறிக்கலாம்.
- தனது வாக்கைக் குறிக்க, ஆணையம் குறிப்பிட்ட பேனாக்களை வழங்கும்.
- வேறு எந்தப் பேனாவையும் பயன்படுத்தி வாக்களிப்பது வாக்கு எண்ணும் நேரத்தில்

அந்த வாக்கினைச் செல்லாததாக்க வழி வகுக்கும்.


- ஒரு வேட்பாளரின் வேட்புமனுவில் குறைந்தபட்சம் 20 வாக்காளர்கள் முன்மொழிபவர்களாகவும், குறைந்தது 20 வாக்காளர்கள் வழிமொழிபவர்களாகவும் கையெழுத்திட வேண்டும்.
- குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிக்கும் விவகாரத்தில் அரசியல் கட்சிகள் தங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது.

## இந்தியாவின் ஈரநிலத் தீர்மானம்




- ஜிம்பாப்வேயின் விக்டோரியா நீர்வீழ்ச்சி பகுதி அருகே நடைபெற்ற ராம்சர் உடன்படிக்கையின் 15வது பங்குதாரர்கள் மாநாட்டில் (CoP15) ஈரநிலங்களை மிகவும் முறையாகப் பயன்படுத்துவதற்கான ஒரு நீடித்த நிலையான வாழ்க்கை முறைகளை மேம்படுத்துவது குறித்த தீர்மானத்தை இந்தியா முன்வைத்தது.
- இந்தத் தீர்மானமானது 172 நாடுகள் மற்றும் உலகளாவிய பங்குதாரர்களின் வலுவான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.
- மக்கள் மற்றும் சமூகங்களின் தினசரி தேர்வுகள் ஈரநிலங்களைப் பாதுகாக்க எவ்வாறு உதவுகின்றன என்பதை இந்தத் தீர்மானம் எடுத்துக்காட்டுகிறது.
- ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் UNFCCC உடன்படிக்கையின் 26வது பங்குதாரர்கள் மாநாட்டில் (CoP26) பிரதமரால் அறிமுகப்படுத்தப்பட்ட LiFE திட்டம் மூலம் இந்தியா இதனை ஊக்குவிக்கிறது.
- LiFE திட்டம் ஆனது மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் சுற்றுச்சூழலுக்காக வேண்டி நடவடிக்கையினை மேற்கொள்ள ஊக்குவிக்கிறது.
- இந்தியாவின் ஈரநில நடவடிக்கைகள் கடந்த மூன்று ஆண்டுகளில் 2 மில்லியனுக்கும் அதிகமான தன்னார்வலர்களை ஈடுபடுத்தியுள்ளன.
- இந்த முன்னெடுப்புகள் ஆனது, சுமார் 170000க்கும் மேற்பட்ட ஈரநிலங்களை வரைபடமாக்கவும், 120000 ஈரநிலங்களுக்கான தெளிவான எல்லைகளைக் குறிக்கவும் உதவியது.

## புதிய UPI விதிகள் 2025




- இந்தியத் தேசியக் கொடுப்பனவுக் கழகம் (NPCI) ஆனது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் தேதி முதல் புதிய ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுக (UPI) விதிகளை அமல்படுத்தியுள்ளது.
- சேவையகத்தின் செயல்பாட்டுச் சுமையைக் குறைக்கவும், அதனைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், பணக் கையிருப்பு குறித்த கோருதல்களின் எண்ணிக்கையினை தற்போது ஒரு நாளைக்கு 50 முறை மட்டுமே மேற்கொள்ள முடியும்.
- தரவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக என்று இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கு விவரங்களை தினமும் 25 முறை மட்டுமே பார்க்க முடியும்.
- சந்தாக்கள் மற்றும் கட்டணங்கள் போன்ற தானியங்கிக் கட்டணங்கள் காலை 10 மணிக்கு முன், பிற்பகல் 1 மணி முதல் 5 மணி வரை அல்லது இரவு 9:30 மணிக்குப் பிறகு மட்டுமே செயல்படுத்தப்படும்.
- பயனர்கள், நிலுவையில் உள்ள பரிவர்த்தனை நிலையை, பரிவர்த்தனை முயற்சிகளுக்கு இடையில் 90 வினாடி இடைவெளியுடன் மூன்று முறை மட்டுமே சரிபார்க்க முடியும்.
- மோசடி மற்றும் தற்செயலானப் பரிமாற்றங்களைத் தடுக்கப் பணம் செலுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு முன் பெறுநரின் பெயர் மற்றும் பரிவர்த்தனை அடையாள முகவரி காட்டப்படும்.

## NCDC திட்டத்திற்கு உதவி மானியம்

- உதவி மானியம் என்ற மத்திய அரசின் திட்டத்தின் கீழ் தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்திற்கு (NCDC) சுமார் 2,000 கோடி ரூபாய் மானியத்தை மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

- இந்தத் திட்டமானது, 2025 ஆம் ஆண்டு முதல் 2029 ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் நான்கு ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும்.
- கூட்டுறவு நிறுவனங்களுக்கான கடன்களுக்கு நிதியளிக்க வெளி/திறந்தச் சந்தையில் இருந்து 20,000 கோடி ரூபாய் நிதி திரட்ட NCDC இந்த மானியத்தைப் பயன்படுத்தும்.
- இந்தத் திட்டமானது கிராமப்புற வருமானத்தை அதிகரிப்பதோடு, வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் கூட்டுறவுத் துறையில் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும்.
- கடன் அணுகலை மிக நன்கு மேம்படுத்துவதன் மூலமும், கூட்டுறவு நடவடிக்கைகளை நவீனமயமாக்குவதன் மூலமும், விளிம்புநிலைச் சமூகங்கள் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் 29 கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட 8.25 லட்சத்திற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன.




## பாடி கௌசிக் ரெட்டி மற்றும் தெலுங்கானா மாநில அரசுக்கு இடையிலான வழக்கு 2025

- பத்தாவது அட்டவணையின் கீழ் தகுதி நீக்க மனுக்களை முடிவு செய்யும் போது தெலுங்கானா சட்டமன்ற சபாநாயகருக்கு 122 அல்லது 212 ஆகிய சரத்துகளின் கீழான அரசியலமைப்புச் சட்ட விலக்கு இல்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- 122 மற்றும் 212 ஆகிய சரத்துகள், பாராளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றங்களில் நீதிமன்றங்கள் தலையிடுவதைத் தடுக்கின்றன, ஆனால் தகுதி நீக்க வழக்குகளில் அவை சபாநாயகரைப் பாதுகாக்காது.
- இது தெலுங்கானாவின் 2023 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு பாரத ராஷ்டிர சமிதி (BRS) கட்சியிலிருந்து காங்கிரஸ் கட்சிக்குத் தாவிய 10 சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்பான வழக்காகும்.
- கட்சி உறுப்பினர் பதவியை தானாக முன்வந்து கைவிட்டதற்காக 2024 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு இடையில் பத்தாவது அட்டவணையின் கீழ் தகுதி நீக்க மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.
- பத்தாவது அட்டவணையானது சட்டமன்ற விதிகளைப் பின்பற்றி தகுதி நீக்க மனுக்களை முடிவு செய்ய சபாநாயகருக்கு அதிகாரம் அளிக்கிறது.
- சபாநாயகர் ஏழு மாதங்களுக்கும் மேலாக அறிவிப்புகளை வெளியிடுவதையும்

மனுக்கள் குறித்து முடிவு செய்வதையும் தாமதப்படுத்தியதால், உச்ச நீதிமன்றத்தின் தலையீடு மேற்கொள்ளப்பட்டது.

- மூன்று மாதங்களுக்குள் நடவடிக்கைகளை முடிக்க சபாநாயகருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதோடு, மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த செயல்முறையை தாமதப் படுத்தினால் பாதகமான முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று எச்சரித்தது.




## சர்வதேசச் செய்திகள்


### இந்திய ஏற்றுமதிகள் மீதான அமெரிக்க வரி




- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் தேதி முதல் சுமார் அனைத்து இந்திய ஏற்றுமதிகளுக்கும் 25 சதவீத வரியை அமெரிக்கா அறிவித்துள்ளது.
- இந்த வரி மின்னணுவியல், மருந்துகள், ஜவுளி, இரத்தினக் கற்கள் மற்றும் வாகன / ஆட்டோமொபைல் பாகங்கள் உள்ளிட்ட முக்கியத் துறைகளைப் பாதிக்கிறது.
- உக்ரைன் மோதலின் போது சீனாவுடன் சேர்த்து ரஷ்யாவின் மிகப்பெரிய எரிசக்தி கொள்முதல் நாடாக இந்தியா உள்ளது.
- இந்த வரியானது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை 0.5 சதவீதம்

வரை குறைத்து, விநியோகச் சங்கிலிகளை மற்ற நாடுகளுக்கு மாற்றக் கூடும்.

## மெடோக் அணை




- திபெத் தன்னாட்சிப் பகுதியில் உள்ள மெடோக் கவுண்டி பகுதியில் உள்ள கிரேட் பெண்ட் எனுமிடத்தில் 60 ஜிகாவாட் திறன் கொண்ட நீர்மின் நிலையத்தினை அமைக்க சீனா அங்கீகரித்துள்ளது.
- இந்த நதியானது, திபெத்தில் யார்லுங் சாங்போவாகத் தொடங்கி இந்தியா, பூடான் மற்றும் வங்காளதேசம் வழியாகப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
- நான்கு நதிக்கரையோர நாடுகளும் அணைகள், கரைகள், நீர்ப்பாசன அமைப்புகள் மற்றும் தடுப்பணைகள் உள்ளிட்ட நீர் உள்கட்டமைப்புத் திட்டங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளன.
- 2006 ஆம் ஆண்டு முதல் நீர்நிலை சார்ந்தத் தரவுப் பகிர்வுக்காக நிபுணர் நிலை நெறி முறை (ELM) இருந்த போதிலும், சீனாவும் இந்தியாவும் ஒரு இருதரப்பு நதிப் பகிர்வு ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கவில்லை.
- 1950 ஆம் ஆண்டு அசாம்-திபெத் நிலநடுக்கம் ஆனது மெடோக்கை மையமாகக் கொண்டு பரவலான வெள்ளம் மற்றும் நதியின் கீழ்நோக்கியப் படுகையில் பேரழிவை ஏற்படுத்தியதால் பிரம்மபுத்ரா படுகை ஒரு செயலில் உள்ள நில அதிர்வு மண்டலத்தில் உள்ளது.

## உலகளாவிய உணவு அமைப்பு இலக்குகளின் மறுமதிப்பாய்வு

- எத்தியோப்பியா மற்றும் இத்தாலி ஆகியவை இணைந்து நடத்திய இரண்டாவது ஐக்கிய நாடுகளின் உணவு அமைப்புகள் உச்சி மாநாடு (UNFSS+4) ஆனது எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவில் நடைபெற்றது.
- இது 2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் உச்சி மாநாட்டையும் 2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆரம்ப ஆய்வுகளையும் தொடர்ந்து, உணவு முறைகள் மாற்றத்திற்கான உலகளாவிய முன்னேற்றத்தை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டது.
- இந்த நிகழ்வானது 2030 ஆம் ஆண்டு நிலையான மேம்பாட்டு இலக்குகளை நோக்கிய நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கான ஒத்துழைப்பு, நிதி மற்றும் முதலீடு ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.




## UN 1267 குழு

- ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் 1267 தடைகள் குழுவின் கீழ் சமீபத்திய கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் The Resistance Front (TRF) அமைப்பு குறிப்பிடப் பட்டுள்ளது.
- தீவிரவாதத்துடன் தொடர்புடைய தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு எதிரான பல்வேறு தடைகளை இந்தக் குழு மேற்பார்வையிடுகிறது.
- இது 1999 ஆம் ஆன்டில் அல்-கொய்தாவை இலக்காக வைத்து நிறுவப்பட்டது, பின்னர் மற்ற தீவிரவாத குழுக்களை உள்ளடக்குவதற்காகவும் விரிவுபடுத்தப்பட்டது.
- சொத்து முடக்கம், பயணத் தடைகள் மற்றும் ஆயுதத் தடைகள் உள்ளிட்ட தடைகள் பட்டியலை இந்தக் குழு பேணுகிறது.
- லஷ்கர்-இ-தைபா மற்றும் The Resistance Front போன்ற குழுக்களுக்கு எதிரான சர்வதேச முயற்சிகளை ஒருங்கிணைப்பதில் இந்தக் குழு முக்கியப் பங்கு வகிக்கிறது.



## ஐ.நா. பெண்கள் அமைப்பின் 15 ஆம் ஆண்டு நிறைவு

- 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஐ.நா. பெண்கள் அமைப்பானது 2025 ஆம் ஆண்டில் அதன் 15வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது, இது உலகளவில் பாலின சமத்துவத்தில் முன்னேற்றம் மற்றும் தொடர்ச்சியான சில சவால்களை எடுத்துக் காட்டுகிறது.

- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதக் கணக்கெடுப்பு பாலினச் சமத்துவத்தில் மெதுவான முன்னேற்றம் குறித்த கவலைகள் 60 சதவீதம் அதிகரித்துள்ளதாகக் காட்டுகிறது.
- 150க்கும் மேற்பட்ட அரசாங்க அறிக்கைகளின் தரவுகள், நான்கில் ஒரு நாடு பெண்களின் உரிமைகளுக்கு எதிரான எதிர்வினையை எதிர்கொள்வதைக் காட்டுகின்றன.
- 600 மில்லியனுக்கும் அதிகமான பெண்கள் மற்றும் சிறுமிகள் , தங்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளைப் பணயம் வைக்கும் வகையில், தற்போது மோதல் மண்டலங்களுக்கு அருகில் வாழ்கின்றனர்.
- One Win Leads to Another (OWLA) திட்டம் ஆனது, விளையாட்டில் முன்னணித்துவம் முன்னெடுப்புகள் மூலம் பிரேசில் மற்றும் அர்ஜென்டினாவில் 3,200க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் இளம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## HOPE ஒப்புமைத் திட்டம்


- லடாக்கின் சோ கர் பள்ளத்தாக்கில் கிரக ஆய்விற்கான இமயமலை நிலையம் (HOPE) திட்டத்தினை இஸ்ரோ தொடங்கியது.
- இஸ்ரோ நிறுவனமானது, இந்திய விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (IIST), இராஜீவ் காந்தி உயிரி தொழில்நுட்ப மையம் (RGCB), ஐதராபாத்தின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் பெங்களூரு விண்வெளி மருத்துவ நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுகிறது.
- 4530 மீட்டரில் நடத்தப்பட்ட இந்த ஆய்வுப் பணியானது அதிகப் புற ஊதா கதிர்வீச்சு, குறைந்த காற்று அழுத்தம் மற்றும் கடுமையான குளிர் ஆகியவை செவ்வாய்க் கிரகத்தில் உள்ள சூழ்நிலைகளை உருவகப்படுத்துகிறது.
- இது எதிர்கால நிலவு மற்றும் செவ்வாய் ஆய்வுப் பயணங்களுக்கான மனித உடலியல் மற்றும் உளவியல் எதிர் வினைகளை பரிசோதிக்கிறது.
- இந்தச் சோதனைகளில் ஆக்ஸிஜன் பற்றாக்குறை, கதிர்வீச்சு வெளிப்பாடு மற்றும் தனிமைப்படுத்தல் சகிப்புத் தன்மை ஆகியவை அடங்கும்.
- 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட லடாக் மனித ஒப்புமை ஆய்வுத் திட்டம் மற்றும் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட அனுகாமி தனிமைப்படுத்தல் ஆய்வு ஆகியவை இதனுடன் தொடர்புடைய முந்தைய

பணிகளாகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## கடல் வெப்ப அலைகள்




- 2023 ஆம் ஆண்டில், கடல் வெப்ப அலைகள் (MHWs) உலகளாவிய கடல் மேற்பரப்பில் 96 சதவீதப் பகுதிகளைத் தாக்கியது.
- இந்த நிகழ்வுகள் இதற்கு முந்தைய சராசரியை விட நான்கு மடங்கு அதிகமாக நீண்ட காலம் நீடித்தன.
- MHWs என்பது குறிப்பிட்ட கடல் பகுதிகளில், மேற்பரப்பில் வழக்கத்திற்கு மாறாக அதிக வெப்பநிலை நீடிக்கும் காலங்கள் ஆகும்.

- 2023 ஆம் ஆண்டில் மொத்த வெப்பச் செயல்பாடு ஒரு சதுர கிலோமீட்டருக்கு 53.6 பில்லியன் டிகிரி செல்சியஸ் நாட்களை எட்டியது.
- இது 1982 ஆம் ஆண்டிலிருந்து, இதற்கு முந்தைய சராசரியை விட மூன்று நிலையான விலகல்களுக்கு மேல் உள்ளது.
- வடக்கு அட்லாண்டிக் பகுதியானது 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தொடங்கி 525 நாட்கள் நீடித்த மிக நீண்ட MHW வெப்பநிலையைக் கண்டது.
- எல் நினோ தொடங்கியபோது வெப்பமண்டல கிழக்கு பசிபிக் 1.63 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை உச்சத்தை எட்டியது.
- பாதிக்கப்பட்ட பகுதிகளில் வடக்கு அட்லாண்டிக், வடக்கு பசிபிக், வெப்ப மண்டல கிழக்கு பசிபிக் மற்றும் தென்மேற்கு பசிபிக் ஆகியவை அடங்கும் என்பதோடு இவை கடல் வெப்பமாக்கல் முரண்பாடுகளில் 90 சதவீதத்தை உருவாக்குகின்றன.
- இந்த நிகழ்வுகள் பவளப்பாறை வெளிர்தல், கடல்வாழ் உயிரினங்களின் பெரும் அளவிலான இடம்பெயர்வு, சேதமடைந்த உணவு வலையமைப்புகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளுக்கு வழி வகுத்ததோடு மற்றும் பசிபிக் காட் முக்கியமான மீன்வளத்தில் சரிவுக்கும் வழி வகுத்தது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## விநியோகம் மற்றும் பயன்பாட்டு அட்டவணைகள் 2020-22

Table 1: Trade during March 2023*

| | | March 2023 (USD Billion) | March 2022 (USD Billion) |
|---|---|---|---|
| Merchandise | Exports | 38.38 | 44.57 |
| | Imports | 58.11 | 63.09 |
| Services* | Exports | 27.75 | 26.95 |
| | Imports | 14.07 | 15.35 |
| Overall Trade (Merchandise +Services) * | Exports | 66.14 | 71.52 |
| | Imports | 72.18 | 78.44 |
| | Trade Balance | -6.04 | -6.92 |

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது 2020-21 மற்றும் 2021-22 ஆண்டுகளுக்கான விநியோகம் மற்றும் பயன்பாட்டு அட்டவணைகளை (SUT) வெளியிட்டது.
- SUT ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உற்பத்தி வருமானம் மற்றும் செலவின அணுகுமுறைகளை ஒரு ஒருங்கிணைந்த கட்டமைப்பில் ஒருங்கிணைக்கிறது என்பதோடு இது மதிப்பீடுகளின் நிலைத் தன்மையையும் மேம்படுத்துகிறது.
- இந்த அட்டவணைகள் 2024 ஆம் ஆண்டு தேசியக் கணக்குப் புள்ளிவிவரங்கள் மற்றும் வருடாந்திர தொழில்துறை கணக்கெடுப்பு போன்ற கணக்கெடுப்புகளின் தரவுகளின் அடிப்படையில் 140 தயாரிப்புகள் மற்றும் 66 தொழில்களை உள்ளடக்கியது.
- வாங்குபவர்களின் விலையில் சரக்குகள் மற்றும் சேவைகளின் மொத்த விநியோகம் 2020-21 ஆம் ஆண்டில் 407.52 லட்சம் கோடி ரூபாயாகவும், 2021-22 ஆம் ஆண்டில் 523.08

லட்சம் கோடி ரூபாயாகவும் இருந்தது.

- இரண்டு ஆண்டுகளிலும் சேவைத் துறையானது, விநியோகத்தில் சுமார் 55 சதவீதப் பங்களிப்பை அளித்தன, அதே நேரத்தில் உற்பத்திப் பொருட்கள் 30 முதல் 33 சதவீதப் பங்களிப்பை அளித்தன.
- மிக உயர் மதிப்புக் கூட்டல் தொழில்கள் குடியிருப்புகள், மீன்பிடித்தல், மீன்வளர்ப்பு, வனவியல், வேளாண்மை மற்றும் கல்வி ஆகியவற்றின் உரிமத்தினை உள்ளடக்கியது ஆகும்.
- இரண்டு ஆண்டுகளிலும் கட்டுமானம் 13 சதவீதத்திற்கும் அதிகமான இடைநிலை நுகர்வில் மிகப்பெரியப் பங்கைக் கொண்டிருந்தது.
- சரக்குகள், இடைநிலை நுகர்வில் சுமார் 70 சதவீதத்தையும், தனியார் இறுதி நுகர்வு செலவினத்தில் 59 முதல் 62 சதவீதத்தையும் கொண்டிருந்தன.

## 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய எரிவாயு எரிப்பு உமிழ்வுகள்





- 2024 ஆம் ஆண்டில் எரிவாயு எரிப்பு ஆனது உலகளவில் 389 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்கு சமமான (CO2e) உமிழ்வினை வெளியிட்டது.
- எரிக்கப்படாத மீத்தேன் மொத்த உமிழ்வுகளில் 46 மில்லியன் டன் பங்களித்தது.
- உலகளாவிய எரிப்பு அளவு 151 பில்லியன் கன மீட்டர் அளவினை எட்டியது, இது 2007 ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான அதிகபட்சமாகும்.
- எண்ணெய் உற்பத்தியில் 3 சதவீதம் மட்டுமே அதிகரித்த போதிலும் நைஜீரியாவின் எரிவாயு எரிப்பு 12 சதவீதம் அதிகரித்துள்ளது.
- நைஜீரியாவில் எரிப்புத் தீவிரம் சுமார் 8 சதவீதம் அதிகரித்து, இரண்டாவது ஆண்டாக அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய எரிப்புகளில் 76 சதவீதத்தினை முதல் ஒன்பது எரிப்பு நாடுகள் கொண்டிருந்தன.
- உலகளவில் எரிப்பு ஆனது, சுமார் 162 பில்லியன் கன மீட்டர் என்ற ஆப்பிரிக்காவின் வருடாந்திர எரிவாயு நுகர்விற்கு கிட்டத்தட்டச் சமமாக இருந்தது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் Zero Routine Flaring (ZRF) எனப்படும் அதிகப்படியான இயற்கை எரிவாயுவின் வழக்கமான எரிப்பினை இடைநிறுத்துதல் என்ற முயற்சியின் இலக்கை அடைய தற்போது 40 சதவீத வருடாந்திரக் குறைப்பு தேவையாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## கோஸ்வாமி துளசிதாஸ் 2025


- 2025 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் தேதியன்று துறவியும் கவிஞருமான கோஸ்வாமி துளசிதாஸின் 528 வது பிறந்த நாளைக் குறிக்கிறது.
- உத்தரப் பிரதேசத்தின் பண்டா மாவட்டத்தில் பிறந்த அவருக்கு ராம்போலா துபே என்று பெயரிடப்பட்டது.
- அவர் முகலாய பேரரசர் அக்பரின் காலத்தில் வாழ்ந்தவர் ஆவார்.
- இராமரின் கதையை மக்களுக்கு அணுகக் கூடியதாக மாற்றுவதற்காக துளசிதாஸ் இராமசரிதமானஸை ஆவாதி மொழியில் எழுதினார்.
- அவரது முக்கியப் படைப்புகளில் தோஹாவலி, சாகித்ய ரத்னா அல்லது ரத்னா இராமாயணம், கீதாவலி, கிருஷ்ண கீதாவலி அல்லது கிருஷ்ணாவலி மற்றும் வினய பத்ரிகா ஆகியவை அடங்கும்.




# முக்கிய தினங்கள்

## உலக நுரையீரல் புற்றுநோய் தினம் 2025 - ஆகஸ்ட் 01

- நுரையீரல் புற்றுநோய், அதன் தாக்கம் மற்றும் தடுப்பு, ஆரம்பகாலக் கண்டறிதல் மற்றும் சிகிச்சை முறைகளின் முக்கியத்துவம் பற்றிய முக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- புகைபிடித்தல் நுரையீரல் புற்றுநோய்க்கு மிக முக்கிய காரணமாகும் என்பதோடு இது தோராயமாக 85% பாதிப்புகளுக்கு காரணமாக உள்ளது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு ''Breaking Barriers: Championing Early Detection and Equal Care" என்பதாகும்.





## உலகத் தாய்ப்பால் வாரம் 2025 - ஆகஸ்ட் 01/07




- ஒவ்வொரு ஆண்டும், உலகம் முழுவதும் தாய்ப்பால் கொடுப்பதை ஊக்குவிப்பதற்கும் ஆதரிப்பதற்கும் இந்தத் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த வாரமானது உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (UNICEF) ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான கருத்துரு “Invest in breastfeeding, invest in the future” என்பதாகும்.

## முஸ்லிம் பெண்கள் உரிமைகள் தினம் 2025 - ஆகஸ்ட் 01

- இந்த நாள் முத்தலாக் சட்டம் (முஸ்லீம் பெண்கள் (திருமண உரிமைகள் பாதுகாப்பு) சட்டம்) இயற்றப்பட்டதைக் கொண்டாடுகிறது.
- இச்சட்டம் ஆகஸ்ட் 1, 2019 அன்று அமல்படுத்தப்பட்டது.
- இந்தச் சட்டத்தின் மூலம் மூன்று முறை தலாக் கூறி விவாகரத்து செய்யும் நடைமுறை குற்றமாக மாற்றப்பட்டது.
- மூன்று முறை தலாக் என்ற வார்த்தையைத் தொடர்ந்து மூன்று முறை உச்சரிப்பதன் மூலம் இந்திய முஸ்லிம் கணவர்கள் தங்கள் மனைவிகளை உடனடியாக விவாகரத்து செய்ய முத்தலாக் அனுமதித்தது.
- இந்த நடைமுறை மனைவியின் சம்மதத்தை கருத்தில் கொள்ளாது.




## CLOVES நோய்க்குறி விழிப்புணர்வு தினம் 2025 - ஆகஸ்ட் 03

- இது ஒரு அரிய மற்றும் மிக சிக்கலான மரபணுக் கோளாறான க்ளோவ்ஸ் நோய்க்குறி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- க்ளோவ்ஸ் நோய்க்குறி என்பது ஒரு அரிய மரபணு கோளாறு ஆகும்.
- PIK3CA எனப்படும் மரபணுவில் ஏற்படும் பிறழ்வுகளால் இது ஏற்படுகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.
- இந்த நிலை திசுக்களின் அதிகப்படியான வளர்ச்சிக்கு வழி வகுக்கிறது என்பதோடு இது உடல் மற்றும் மனம்சார் நல்வாழ்வைப் பாதிக்கிறது.
- இந்த நோய்க்குறிக்கு இதுவரை எந்த சிகிச்சையும் இல்லை.




## உலகளாவிய வலைதள தினம் – ஆகஸ்ட் 01

- உலகளாவிய வலை தளம் (www) உருவாக்கப்பட்டதை நினைவு கூருவதற்காகவும்,

உலகில் அதன் தாக்கத்தை அங்கீகரிப்பதற்காகவும் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.

- 1991 ஆம் ஆண்டு இந்த நாளில், டிம் பெர்னர்ஸ்-லீ உலகளாவிய வலை தளத்தினை அறிமுகம் செய்யும் ஒரு திட்டத்தை ஆல்ட் ஹைபர்டெக்ஸ்ட் (தகவல் இணைப்பு உள்ளீடுகளைக் கொண்ட) செய்திக் குழுவில் வெளியிட்டார்.
- 1989 ஆம் ஆண்டு சர் டிம் பெர்னர்ஸ்-லீ என்பவரால் இந்தத் தளம் உருவாக்கப் பட்டது.
- CERN அமைப்பில் உள்ள ஆராய்ச்சியாளர்களிடையேத் தகவல்களைப் பகிர்வதற்கும் தகவல் மேம்பாட்டினை மேற்கொள்வதற்கு ஏதுவாகவும் அமைந்த "பரவலாக்கப்பட்ட தகவல் அமைப்பிற்கான" முன்மொழிதலை அவர் சமர்ப்பித்தார்.
- முதல் இணையச் சேவையகம், "http," மற்றும் முதல் இணைய உலாவி, "WorldWideWeb" (பின்னர் Nexus என மறுபெயரிடப்பட்டது) ஆகியவை 1990 ஆம் ஆண்டில் பெர்னர்ஸ்-லீ மற்றும் அவரது சகாவான ராபர்ட் கைலியாவ் ஆகியோரால் உருவாக்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான கருத்துரு ‘Empowering the Future: Building an Inclusive, Safe, and Open Web’ என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★